18

தமிழ்நாடு அரசு

நீர்வளத்துறை

# குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

# மொத்த வகை (சதவீத ஒப்பந்த முறை)

**குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 01/மபெவகோ/திமலை/2022–2023/கோ.RRR/இவஅ6/நாள். 18.04.2022**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் திருவண்ணாமலை, நீர்வளத்துறை, மத்திய பெண்ணையாறு வடிநில கோட்டம், செயற்பொறியாளர் அவர்களால் கீழ்காணும் பணிகளுக்கு **28.04.2022** அன்று பிற்பகல் 03.00 மணி வரையில் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத் துறையில் பதிவு செய்துள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாளில் பிற்பகல் **03.30** மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் / அவர்களது முகவர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவத்தை www.tenders.tn.gov.in என்ற இணைய தளத்தின் மூலமாக இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவம் திருவண்ணாமலை, மத்திய பெண்ணையாறு வடிநில கோட்டம், நீவது செயற்பொறியாளர் அலுவலகத்தில் **19.04.2022** முதல் **27.04.2022** வரை பிற்பகல் 05.45 மணி வரை விற்பனைக்கு கிடைக்கும்.

**திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஏரிகள் பழுது பார்த்தல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள்.**

<u>பணியின் பெயர் :</u> வ.எண். (1) கீழ்பென்னாத்தூர் வட்டம், வயலூர் ஏரி (2) செய்யாறு வட்டம், பெரும்பள்ளம் பெரிய ஏரி.

<u>பணியின் தோராய மதிப்பு (ரூ. இலட்சத்தில்) :</u> (1) ரூ.47.95, மற்றும் (2) ரூ.29.50.

<u>முன் வைப்புத் தொகை (ரூபாயில்) :</u> (1) ரூ. 48,000/– மற்றும் வ.எண். (2) ரூ. 30,000/–

<u>ஒப்பந்தப்புள்ளி படிவ விலை மற்றும் வரி : ரூ.9,000/– + 1,620/– (GST)</u>

<u>பணி முடிக்க வேண்டிய காலம் :</u> 6 மாதங்கள் (ஒவ்வொரு பணிக்கும்.)

<u>ஒப்பந்தக்காரர் தகுதி :</u> வகுப்பு 2 மற்றும் அதற்கு மேலும்.

ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை மற்றும் முன் வைப்புத் தொகை ஆகியவை செயற்பொறியாளர், நீவது., மத்திய பெண்ணையாறு வடிநில கோட்டம், திருவண்ணாமலை அவர்களின் பெயரில் வரவு வைக்கப்பட வேண்டும்.

இதர விவரங்கள் மற்றும் விதி முறைகளை மேற்குறிப்பிட்டுள்ள இணைய தளத்திலும், திருவண்ணாமலை, மத்திய பெண்ணையாறு வடிநில கோட்டம், நீவது., செயற்பொறியாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

செயற்பொறியாளர், நீவது.,(கூ/பொ)
மத்திய பெண்ணையாறு வடிநில கோட்டம்,
திருவண்ணாமலை – 3.

---

செயற்பொறியாளர், நீவது.,(கூ/பொ)
மத்திய பெண்ணையாறு வடிநில கோட்டம்,
திருவண்ணாமலை – 3.